

*இயல் – 2*

# மனிதநேயக் கோட்பாடு வரையறைகள்

மனித வாழ்வில் இளம் பருவத்தினரே இலக்கியத்தின் தலைமைப் பாத்திரங்களாகத் திகழ்கின்றார். இப்பருவத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் புகழ் நாட்டமுடன் அனைத்து விருப்ப ஆர்வங்களை நிறைவேற்றிக் கொள்ள விழைகின்றனர். இவ் ஆர்வங்களில் கருணை, வீரம், ஈகை, உதவி மனப்பாங்கு ஆகியன மிளிர்கின்றன. இவற்றிற்கு மேலாகப் பாலியல் நாட்டம் முதன்மையுறுகின்றது. இதனைத் துய்க்கத் தலைமக்களுக்குக் கொடுப்போரும், கொள்வோரும் இடையூறாகக் கூடாது. தத்தம் வாழ்வைத் தனியே கலந்து பழகிச் சரியான புரிந்து கொள்ளுதலுடன் வாழத் தலைப்படல் வேண்டும். இவ்வழி காதலுறவு உலக அன்பின் அடிப்படையாக அமையுமெனச் சங்க அகப்பாடல்கள் வலியுறுத்துகின்றன.

## *மனித நேயக் கோட்பாடு*

மனித குலத்தை மதிக்கவும், அன்புகாட்டவும், முதன்மையாக, முழுமையாகச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்தின என்பதை,

"அகத்திணை வாழ்க்கையிலக்கியம் ஆதலால் உலக நடைமுறைக்கு ஒப்பதாயும், பெயரில்லாதாரின் காதலியல்புகளைப் புலப்படுத்துவதால் கற்பவர்க்குத் தமது என்ற உணர்ச்சியை ஊட்டுவதாயும் அமைந்துள்ளது"[1] என்று வ. சு. ப. மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார்.

"உலகம் உவப்புடன் வாழ அன்பே அடிப்படையானவரே பிறர்க்கும் இன்பத்தை உண்டாக்கித் தாமும் இன்பம் உடையவராக வாழ்வதற்குரியவராவர்"[2]

இவ் அன்பு உள்நோக்கமற்றதாக, பிறருக்கு இடையூறு அற்றதாக, மேலும் இடையூறு செய்தோரிடம் இணக்கம் காட்டுவதாக அமைதல் வேண்டும். இவ்அடிப்படையின் புரிதலிலேயே மனித நேயம் பிறக்கிறது.

"மனித நேயம்" என்ற சொற்றொடர் மனிதன், நேயம் ஆகிய இரண்டின் கூட்டாக அமைந்தது. மனிதர்களுக்கிடையில் நிலவும் நேயம், மனிதர்களிடம் காட்டும் நேயம், மனிதர்களுடைய நேயம் எனப் பலவாறாகப் பகுத்துப் பொருள் காணும் நிலையில் இது அமைந்துள்ளது. மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் இடையில் நிலவும் அன்பு கலந்த உறவை இது ஒருவகையில் சுட்டி நிற்கின்றது. மனிதன் ஆறறிவு படைத்தவன் என்றும், பிற உயிர்கள் ஐந்தறிவு கொண்டவை என்றும் பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் கூறுகின்றது. இவ்வாறு குறிப்பிடும் தொல்காப்பியம் மனிதனின் ஆறாவது அறிவு 'மனம்' எனக் குறிக்கிறது.

"ஆறறிவதுவே அவற்றொடு மனனே" (தொல் 511) என்ற நூற்பா இக்கருத்தை நிறுவுகிறது. எனவே மனம் உடையவன் மனிதன் என்ற பொருளும் இதற்கமைந்திருத்தலை அறிய முடிகிறது. இந்த 'மனம்' என்ற புலன் (அறிவு) சிந்தனை வளர்ச்சிக்கும், செயல்திறனுக்கும்

அடிப்படையாய் அமைந்திருக்கிறது. மனத்தின் மூலம் உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுகின்றன. மனம் பலவிதமான செயற்பாட்டுடன் உறவு கொண்டுள்ளது. மனசாட்சி, மனக்கண், மனநிம்மதி, மனப்பால் முதலிய வழக்குத் தொடர்களும், வழங்கி வருதலைக் காணமுடிகிறது. இவை அனைத்தும் சிந்தனைக்குரிய புலன், மனம் என்பதை உறுதி செய்கின்றன. எனவே 'மனம்' என்ற ஆறாவது அறிவு மனிதனுக்குச் சிந்தனை ஆற்றலை வளர்க்கிறது என்பது புலனாகிறது.

இவ் ஆறாவது அறிவாகிய சிந்தனைத் திறனும், மனிதத் தன்மைகளாகிய அன்பும், இரக்கமும் நிறைந்த மனிதன் தனித்து வாழ்வதென்பது இயலாததாகும். அவன் தன் சமூகத்துடன் இணைந்தே வாழ வேண்டியுள்ளது. இதனாலேயே மனிதன் ஒரு சமூகப்பிராணி என அறிஞர்களால் குறிக்கப்படுகிறான்.

"இயற்கைப் படைப்பின் மணிமுடியாக விளங்குபவன் மனிதன். தனக்கேயுரிய சிறப்புப் பண்புகளாலேயே மனிதன் பிற விலங்குகளின்றும் வேறுபடுகிறான். அவனுடைய மனமே அவ்வேறுபாட்டை உருவாக்குகிறது. சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும் போது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நலத்தைப் பேண வேண்டியவனாகிறான்"[3] என மேலைநாட்டு அறிஞரின் கூற்றை எடுத்துக்காட்டுகிறார். கா. மீனாட்சி சுந்தரம்.

## நேயம்

"தமிழ் மொழியில் ஒரு பொருள் குறித்த பல சொற்களும், பல பொருள் குறித்த ஒரு சொல்லும் மிகுதியாகக் காணப்படுகின்றன. நேயம் என்பதற்குக் கழகக் கையகராதி நேசம், பக்தி, நெய், நன்மை என்ற பொருள்களைக் குறிக்கிறது."[4]

நேசம் என்பதற்கு 'அன்பு', 'தகுதி' என்ற பொருள்களையும், அவ்வகராதியில் காண முடிகிறது.[5] மேலும், "நேயம் என்ற சொல்லுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் லெக்சிகன் அன்பு, பக்தி, என்ற பொருள்களைத் தருகின்றது. Love, Affection, Piety, Devation முதலிய ஆங்கிலச் சொற்களையும் இது இவ்விடத்தில் எடுத்துக் கூறியுள்ளது."[6]

The New Caxton Encyclopaedia நேயம் என்பதை நுணுக்கமாக விளக்குகின்றது. ஒரு மனிதன், இடம், கருத்து முதலியன பற்றிய ஆழ்ந்த அன்பு நேயம் எனக் கருதப்படுகிறது. இது ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் இருக்கும் உறவைக் குறித்து முதற்கண் எழுந்தது. பின்னர் நாட்டன்பு, இசையன்பு, பிள்ளையன்பு, கடவுளன்பு எனவும் வழங்கப்பட்டது. பிராய்ஃடு என்னும் உளவிய அறிஞரும் இதனை உளவியல் சார்ந்த ஒன்றாகக் கூறுகின்றார். பாலுணர்வுப் பிரச்சனைகளில் இது முக்கியமான ஒன்றாகவும் கருதப்படுகிறது. அன்பு என்பது வாழ்க்கையைக் கொடுப்பது, சுதந்திரமாக்குவது. இது தனிப்பட்ட இரு மனிதர்களுக்குரிய உணர்ச்சியாகக் கொள்ளப்படுகிறது. இடத்திற்கு இடம், ஆளுக்கு ஆள்

அவரவர் முதிர்ச்சியின் அடிப்படையில் இதனை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இது அமைந்துள்ளது.[7]

*அன்பு*

நேயம் என்பதற்கு 'அன்பு' என்றும் ஒரு பொருள் உண்டு. அன்பு என்ற பொருளைக் குறிக்க பல சொற்கள் உள்ளன. பற்று, பாசம், அருள், காதல், நட்பு, நேயம், பக்தி, கருணை இவ்வனைத்துச் சொற்களும் அன்பு என்னும் ஒரு பொருளையே குறிக்கின்றன.

பெற்றோர் தம் குழந்தைகளிடத்துச் செலுத்தும் அன்பு, பற்று, பாசம் எனப்படுகிறது. கணவன், மனைவியரிடையே தோன்றும் அன்பு 'காதல்' எனப்படுகிறது. குருவினிடத்து அன்பர்கள் கொள்ளும் அன்பு 'பக்தி' எனப்படுகிறது. ஒத்த அன்புடையார் இருவர் தம்முள் பரிமாறிக் கொள்ளும் அன்பு 'நட்பு' என்றழைக்கப் பெறுகிறது. இறைவன் எல்லாப் பொருள்களிடத்துக் கொள்ளும் அன்பும், மனிதன் அஃறினைப் பொருள்களிடத்துக் கொள்ளும் அன்பும் "அருள்" எனவும், அதன் முதிர்வு நிலை "கருணை" எனவும் குறிக்கப்படுகின்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகப் பெருஞ் சொல்லகராதி அன்பு என்பதற்குத் தொடர்புடையார் மீது உண்டாகும் பற்று (காமச்சார்பிலா) நட்பு, விருப்பு, காதல், உளநெகிழ்ச்சி, காமம், ஆசை, கருணை, பக்தி, மென்மை[8] எனப் பொருள் கூறுகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகச் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் "காதல்" என்ற சொல்லிற்கு அன்பு என்ற சுருக்கமான பொருள் மட்டும் கொடுக்கின்றது.[9]

அன்பின் பெயர்களை நாமதீப நிகண்டு,

"ஈரநேயம் புரிவா ணம்பாசம் பக்திப்பரி
வார்வநாரன் பெழுமையன் புழுவல் - போர்மை
கருணையிரக்கந் தயாவே கிருபை
யருளளிய னுக்கிரமாம்"[10]

என்ற நூற்பாவில் தருகிறது. மேலும் அன்பு என்ற சொல்லுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் லெக்சிகன், தொடர்புடையார் மாட்டு உண்டாகும் பற்று, நேசம், கருணை முதலிய பொருள்களைத் தருகின்றது.[11]

இத்தகைய அன்பு என்ற உணர்ச்சி மக்கள் உயிர்க்கு மட்டுமின்றி எல்லாவுயிர்களிடத்தும் அமைந்துள்ள பண்பாக காணப்படுகின்றது. பறவை, விலங்கு இனங்கட்கும் அன்பு வெளிப்பாடு உண்டு.[12] என வ. சு. ப. மாணிக்கம் அன்பு பற்றிச் 'சங்க நெறி' என்ற தமது நூலில் குறிப்பிடுகிறார். அன்பே இவ்வுலக இயக்கத்தின் அடிப்படைப் பொருளாக அமைந்திருக்கிறது என்பதை மேற்கண்டவற்றால் தெளிய முடிகிறது.

## அன்பு - நேயம்

அன்பு - நேயம் என்ற இவ்விரு சொற்களுக்கும் தனித்தனியே நாம் கண்ட மேற்கூறிய விளங்கங்களை உற்று நோக்குங்கால் நேயம் என்பதும் அன்பு என்பதும் மனித மனங்களில் இயற்கையாக எழும் ஓர் உயர்ந்த உணர்வு என்பது புலனாகும். இது வெளிப்படும் முறைகளிலும், காரணங்களிலும், இதன் செயல்பாடுகளிலும் வேறுபாடுகள் காணப்படின் இவ்வுணர்வை எவ்வுயிரும் நீக்கவோ, மறைக்கவோ இயலாததாகும்.

அன்பு எனப்படும் நேயம் அனைத்திற்கும் உரியதாயினும் மனித மனங்களில் எழுகின்றபோது மனிதநேயம் எனப்படுகின்றது.

மனிதனுக்கு உயிர் வாழ உணவும், உடையும், இருப்பதற்கு இடமும் தேவை. இவை அனைத்தும் மக்கள் இனம் அனைத்திற்கும் பொதுவானவை ஆகும். இருப்பினும் வாழ்க்கையில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. மதம், சாதி, பொருளியல் முதலியவற்றால் வேறுபட்டும், நிறத்தாலும், நிலத்தாலும் பிளவுபட்டு வாழும் ஒற்றுமையற்ற வாழ்க்கை தொடர்ந்து வருகின்றது. இத்தகைய பிரிவினைகளைப் போக்கவும், புதிய வழிகளைக் காணவும் காலந்தோறும் எண்ணற்ற பெரியோர்கள் தோன்றித் தம் கருத்துக்களைப் பரப்பி வந்தாலும், அவர்களது முயற்சி வெற்றியடையாமலேயே போகின்றது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மனிதநேயக் குறைபாடுகளே ஆகும். எனவே மனிதன் மனிதனாக வாழவும், சமுதாயமும், நாடும், வளம் பெறவும், தான், தனக்கு,

தங்களுக்கு என்ற சுயநல உணர்வு மறைய வேண்டும். மேலும் பொதுநலம் மேலோங்க வேண்டும். அதற்கு அடிப்படைப் பண்பாக அமைவதே மனிதநேயப் பண்பாகும்[13]

## *மனிதநேயம் ஒரு வரையறை*

விலங்கினத்திலிருந்து தோன்றிய பரிணாம வளர்ச்சியே மனிதன் என்பர் உயிரியல் அறிஞர்கள். அதற்கு ஆதாரமாக மனிதனிடத்தே காணப்படும் விலங்கினக் குணங்களை எடுத்துக் காட்டுவர். அவர்கள் கூற்று மெய்யாகக் கூட இருக்கலாம். ஆனால் மனிதன் விலங்குகளிலிருந்து காலங்காலமாகப் படிப்படியாகச் சிலபல மாற்றங்களைப் பெற்று வருகின்றான். அவனது சிந்தனை, சக்தி அவனது மாற்றங்களுக்குக் காரணமாகின்றது. அதனாலேயே மனித, சமூக அமைப்புத் தோன்றி இன்றும் வளர்ந்து வருகிறது. அன்பு என்பது அனைத்து உயிர்கட்கும் பொதுவென்றாலும் அவை தத்தம் இனத்தோடு தம் அன்புப் பரப்பை நிறுத்திக் கொள்ள மனிதன் மட்டும் உலகப் பொருட்கள் அனைத்திடத்தும் அன்பு காட்டுகின்றான். அதுவே அவனை உயர்ந்தவனாக்குகிறது. நாடும், மொழியும், இனமும், எல்லையும் கடந்தது மனிதநேயம்[14]

பொங்கிவரும் அன்பு வெள்ளத்தில் சாதிச்
சண்டைகளும், சமயச் சழக்குகளும்
அழிய விஞ்சி நிற்பது மனிதநேயமே [15]

உலகம் போரின்றி வாழவும், உலக மக்களிடையே அன்பு தழைக்கவும், ஏற்றத்தாழ்வுகள் இல்லாதொழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழிவகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனிதநேயம்[16]

என அறிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

"அன்பு வேண்டும்
அஃது யார்க்கும்
ஆக்கம் கூட்டும்
இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்.
'இது எனது' எனுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்."

என்ற பாவேந்தர் பாடல் மனிதர் ஒவ்வொருவரும் தனது என்ற தன்னலத்தை மறந்து அன்பை வளர்த்து, அனைவருக்கும் நன்மை செய்வதே மனிதநேயம் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. மனிதநேயத்தை வளர்ப்பதே மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

மனிதர்களில் பல இனக்கூறுகள் இருந்த போதிலும் மனிதநேயம் எல்லா இன மக்களையும் ஒன்றுபடுத்தி, "மனித இனம் ஓரினம்; ஓரினமாக இயங்கக்கூடிய ஆற்றல் பெற்றது மனித இனமே" என்று அறிவுறுத்துகின்றது. "மனித வாழ்வே முடிவில்லாத இந்நிலவுலகமாகும். இந்த நிலவுலகம் மனிதனுக்கு முடிவில்லாத அவிழ்க்க இயலாத ஒரு

பெரிய ‘நூல் கண்டு’ போன்றது” என்று வாழ்வின் தொடர்ச்சியையும் அறிஞர் குறிப்பிடுவர்.[17]

மனிதாபிமானம், மனித அபிமானம், மானுடப் பற்று அனைத்தும் மனிதநேயமே. தன்னையொத்த மானுடப்பிறவியின் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாகத் துன்பம் அடைபவரைக் கண்டு தன் துன்பமாய் எண்ணிப் போக்க நினைக்கின்ற மனப்போக்கையும் மனிதாபிமானம் என்று வழங்காமல் அறம், அருள், சமதர்மம், சமரசம், ‘நான் பெற்ற இன்பமே பெறுக இவ்வையகம்’ என்று பல சொற்களால் குறிப்பிடுகின்றனர். இவை எல்லாப் பொருளும் அடங்கிய ‘அஹிம்சை’ என்ற சொல் காந்தியடிகளால் பரப்பப்பட்டது.

“அன்பென்பது இயற்கையாகவே மனித மனத்தில் அமைந்திட்ட ஒரு பண்பாகும். இதனை நன்கு வளர்ப்பவனே முழு மனிதனாக முடியும். அன்பிலே துவங்குகின்ற குழந்தைப் பருவ வாழ்வு வளர்ந்து, வளர்ந்து வடிவெடுக்கும் பொழுது சமுதாயத்தின் பயிறுக்குத் தயாராகின்றது”.[18]

எனச் சு. சிவகாம சுந்தரி அன்பு பற்றிக்கூறுவது எண்ணத்தக்கது. மேலும்,

“அன்பு கூடுதலே நாகரிகம்; திருந்திய வாழ்க்கையில் எவனிடம் ஓர் உயர்ந்த குறிக்கோள் காணப்படுகின்றதோ அவனிடம் உயர்ந்த நாகரிகம் உண்டு”[19]

என்று எடுத்துரைப்பதும் 'அன்பு' பற்றிய நுணுக்கத்தைத் தருகின்றது.

மனித உள்ளம் அன்பிற்காகவே படைக்கப்பட்டுள்ளது. அன்பை வழங்குவதும், அன்பைப் பெறுவதுமே உள்ளம் ஆற்ற வேண்டிய அலுவல். அன்பு மட்டும் மனிதர்கள் எல்லோரிடமும் பரிபூரணமாக இருக்குமானால், இந்த உலகமே உயர்ந்துவிடும். சாதாரண 'ஆத்மா' நிலையிலிருந்து, 'மகாத்மா' நிலைக்கு உயர்த்துவது அன்பு.மக்கள் உயிரினுள் உறைகின்ற அன்புதான் படிப்படியாக அவனை உயர்த்துகின்றது; அறவோனாகக்குகின்றது; வானுறையும் தெய்வத்துள் சேர்த்து வைக்கின்றது. பின்னும் இறைவன் 'திருவடி நிழலிலே' என்றென்றும் பேரின்பப் பெருவாழ்வு வாழவும் உதவி புரிகின்றது. "அன்பைச் செலுத்து; *சிங்கத்தின் மீசையைக்கூட* உன்னால் பறிக்க முடியும்" என்னும் அரேபியப் பழமொழிக்கிணங்க அன்பிற்கு அடிபணியாதவர்களே இல்லை என்று உறுதியிட்டுக் கூறமுடியும். [20] என மு. பாண்டுரெங்கன் விவரிக்கின்றார். இதுபோலவே 'அன்பு' அழியாதது; இம்மை இன்பத்தையும், வீட்டின் இன்பத்தையும் ஒருங்கே தரவல்லது என்றும் கூறுகின்றனர்.

"மனித வாழ்வின் மாண்புகளை உணரவும், மனித வாழ்வின் இன்பங்களை நுகரவும் முடியாதவண்ணம் தடுக்கப்பட்டு, இழிவுக்கும், பழிப்புக்கும் ஆளாக்கப்பட்டுக் கிடந்த மனிதனை, மனித இனத்தை

மீட்டெடுக்கவும், மாண்புறச் செய்யவும் வந்த உயரிய கோட்பாடே மனிதநேயம்”[21]

என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இத்தகு வரையறைகளைக் கொண்டுள்ள ‘மனிதநேயம்’ அன்பு கலந்த பண்பாகும்.சமுதாயத் தளத்தில் எப்பகுதியிலும் இதன் சாயல் படிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதை ஆய்வு மேற்கோள்கள் சுட்டி நிற்கின்றன.

தாய், தந்தை, அண்ணன், தங்கை, கணவன், மனைவி என வரும் குடும்ப உறவுகளிலும் மனிதநேயப் பண்பு மிளிர்ந்திருப்பதைக் காண முடிகிறது. இலக்கியங்களில் காணப்பெறும் தாய், தோழி, நற்றாய், செவிலி முதலிய உறவு நிலைப் பாத்திரங்கள் மனித நேயப் பண்புடன் இலக்கிய சூழலில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அக வாழ்க்கை, புற வாழ்க்கை, காதல், களவு, கற்பு முதலிய வாழ்க்கை நெறிமுறைகளிலும் இந்த மனிதநேய உணர்ச்சி பழுதின்றிச் சுட்டப்பட்டுள்ளது. சமுதாய உறவுகள் இப்பண்பினால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாழ்க்கையைச் செம்மையாக்கிப் பண்பு நிறைந்த சமுதாயமாக மாற்றிட இவ்வுணர்ச்சி பெரிதும் பயன்படுகின்றது. தனிப்பட்ட வகையில் ஆண்களும், பெண்களும் மனிதநேயம் மிக்குடையவர்களாக இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றிருக்கின்றனர்.

மனிதன், மனிதனிடம் காட்டும் நேயம் மட்டுமன்றிப் பிற உயிர்களிடத்தும் மனிதன் கொண்டுள்ள இரக்க உணர்ச்சியும் மனிதநேயப் பண்பாகவே கூறப்படுகின்றது.

### *மனிதநேயக் கோட்பாடு பற்றி அமெரிக்க கலைக்களஞ்சியம்*

மனிதநேயம் எனும் இக்கோட்பாடு கிரேக்கச் செவ்வியல் இலக்கியங்களைப் போன்ற பழமையும், 20-ஆம் நூற்றாண்டிற்கே உரிய பழமையும் கொண்டு திகழ்கின்றது. பரந்துபட்ட பொருட்செறிவுடைய இக்கோட்பாடு தன்னுரிமை கொண்ட மனித மாண்பை மையமாகக் கொண்ட ஒரு மெய்யியலாகவும் உருவாயிற்று. இம்மை வாழ்வில் கிடைக்கும் எல்லா நுகர்வுகளையும் மனிதன் நுகர வேண்டும் என்பதும் வேறு எந்த ஆற்றலும் மனித ஆற்றலை மிஞ்சக் கூடியதாக இல்லை என்பதை வலியுறுத்துவதும் இதன் இலட்சியமாகும். மனிதநேயம் சமயத்தை - அறிவியலை - அல்லது ஏதேனும் ஓர் அரசியலைச் சார்ந்தோ அல்லது எதனையும் சாராமல் தனித்தோ கூட இருக்கலாம். ஆனால் அதன் உயிர்த்துடிப்பு என்னெவெனில் மதச்சார்பின்மை - முற்போக்குடைமை - சமயப்பொறை ஆகியன எதையும் ஏன் என்று வினாவசம் மெய்யறிவு கொள்ளுதலும் இதன் கல்வி முறையாகும்[22] என்று விளங்கும். மனிதபண்பை வளர்த்து, மனித அன்பைப் புகட்டிய கல்வி முறையாகவும், மெய்யியலாகவும் வளர்ந்த இக்கோட்பாடு ஐரோப்பியாவில் நடந்த நில உடைமை எதிர்ப்போடு தொடர்பு கொண்டு,

நிலமற்ற ஏழை எளிய மக்களின் உரிமைக்காகவும், நல்வாழ்விற்காகவும் போராடிய மனித நலச் சிந்தனையாளர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. சமயங்கள் சமூகத்தில் மேலாண்மை செலுத்திய நிலையில் சமய எதிர்ப்புக் கோட்பாடாகவும் இது திகழ்ந்தது.

இதன் குறிக்கோள் வருமாறு :

1. மனிதப் பெருமையை உறுதி செய்தல்
2. எந்த மதிப்பும் மனிதனைக் காட்டிலும் பெரியது அன்று என்று உறுதி செய்தல்
3. மனித உழைப்பிற்கு மதிப்பளித்தல்
4. மனிதனுடைய ஆற்றலிலும், அறிவிலும் நம்பிக்கை வைத்தல்
5. சுதந்திரமான வளர்ச்சியில் மனிதனுடைய உரிமைக்கு ஏற்பு வழங்கல்[23]

இவ்வாறு மனித உரிமைகளையும், ஆற்றல்களையும் மதித்துச் செயல்பட்ட இக்கோட்பாட்டில் சொத்துரிமை பற்றிய சிந்தனை இடம் பெறாததும் குறிக்கத்தக்கதாகும்.

"மனித நலச் சிந்தனையாளர்களாக விளங்கிய அறிஞர்கள் பெரும்பான்மையோர் முதலாளித்துவ சிந்தனையாளர்களாக விளங்கியது இதற்கான காரணம் என்பர்".[24]

இதனை,

"சமத்துவம் சகோதரத்துவம்
சுதந்திரம் என்ற மிக உன்னதமான
முழக்கங்களை முன் வைத்த கொள்கை வரையிலும்
கூட, தனிச் சொத்துடைமையிலும், தனி மனித ஆளுமைப்
பண்புகளிலும் மனிதநேயக் கோட்பாட்டின் பங்கு என்ன
என்பது பற்றிய சிந்தனை இடம் பெறாமல் இருந்தது ஒரு
குறையேயாகும்"[25]

என்று விளக்குவர். இருப்பினும் இம்மெய்யியல் தோற்றம் கொண்ட தொடக்க காலத்தில் இருந்தே மோர் (More) காம்ப்பெனல்லா (Compenalla) முன்சர் (Munzar) போன்ற மனிதநலச் சிந்தனையாளர்களும் மற்றும் இக்கோட்பாட்டிற்காகப் பாடுபட்ட பிற அறிஞர்களும் உழைக்கும் மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. "சொத்துடைமைச் சமூக அமைப்பில் இருந்த மனிதநேயத்தை முறியடிக்கும் கூறுகளை எதிர்ப்புடன் தனி உடைமையைத் தாக்கியும், பொதுஉடைமையின் தேவையை வற்புறுத்தியும் தம் கொள்கைகளை விளக்கினர்.[26]

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியில்தான் இக்கோட்பாட்டின் முழு வெற்றியாகிய சோசலிச மனிதநேயம் உருவாகின்றது. இதனை உருவாக்கியவர் மார்க்கம்எங்கல்சும். அவர்களின் கோட்பாட்டைச் செயல் வடிவமாக்கிக் காட்டியவர் இலெனின். எனவே இக்கோட்பாடு மார்க்சிய, இலெனினிய மனிதநேயம் எனவும் குறிப்பிடப்படும்.

சமூக அறிவியலின் வளர்ச்சியாகத் தோன்றிய மார்க்சியம் பாட்டாளி வகுப்பின் புதிய புரட்சிகர கோட்பாடாக மலர்ந்தது. மனிதநேயத்தின் உள்ளார்ந்த பொருண்மைகளைக் கொண்டு திகழ்ந்தது

மார்க்சிய மனிதநேயத்தின் இயல்பினை,

"மார்க்சியம் வரலாற்றை பொருளாயதமாகப் புரிந்து கொள்ளும் கொள்கையாகவும், விஞ்ஞானப் பூர்வமான கம்யூனிசத்தின் கொள்கையாகவும் பரிணமித்து இதுவே மனிதநேய இலட்சியங்களுக்கும், சமுதாய வளர்ச்சியின் புறநிலையான நியதிகளுக்கும் இடையே இணைப்பைக் காட்டும் முதல் படிப்பினையாகும். இதன்மூலம் மனிதநேயத்தை விஞ்ஞானத்துடன் ஒன்று சேர்த்ததும் ஆகும்"[27]

என விளக்குவார் போபொவ்.

மனித சமுதாயத்திற்கு, பல நூற்றாண்டுகளாகச் சுரண்டப்பட்டு வந்த மக்களுக்கும் பொதுவுடைமைப் பேரொளியாக அமைந்த உருசியாவின் மனிதநேயக் கோட்பாடு முழுமை பெற்றது. பொதுடைமை உருசியாவில் படைக்கப்பட்ட இலக்கியங்களில் இக்கோட்பாடே அடித்தளமாக அமைந்தது மார்க்சிய - லெனினிய மனிதநேயமாக அழைக்கப்படும்.

## *காலந்தோறும் மனிதநேயம்*

உலக மக்களின் ஒவ்வொரு காலகட்ட வாழ்க்கையையும் அறிய பேருதவியாக இருப்பவை வரலாற்று நூல்களும், இலக்கியங்களும் ஆகும். வரலாற்று நூல்கள் அவ்வக்காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே சுட்டிச் செல்கின்றன. இலக்கியங்கள் அவற்றை அழகுபடுத்தி ஆர்வத்தோடு செப்புகின்றன. எனவே இலக்கியப் படைப்பாளிகளின் பணி மனித சமுதாயத்திற்கு மிகவும் இன்றியமையாததாகின்றது. மனிதநேயத்தை வளர்க்கும் கலை வடிவங்கள் பற்பல.[28] அவற்றுள் சிறப்பிடம் பெறுவது இலக்கியம் என்றும் , மனிதநேயப் பண்பாளர்களை உருவாக்குவதில் கவிஞன் முன்னனியில் நிற்கிறான்[29] என்றும், மனிதநேயத்தை வளர்க்க வேண்டிய பொறுப்பு இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளர்களுக்கே பெரிதும் உரியது என அறிஞர்கள் கூறுகின்றனர். சமுதாயத்தின் மீது அக்கறை கொண்ட இலக்கியப்

படைப்பாளர்களே சமூகத்தின் நன்மை, தீமைகளை மிக அழகாகச் சித்தரித்துக் காட்டுகின்றனர்.

### *தொல்காப்பியர் காலம் காட்டும் மனிதநேயம்*

தமிழ்மொழியைப் பொறுத்தவரை அனைத்திற்கும் இலக்கணம் வகுத்தவராகக் கருதப்படுபவர் தொல்காப்பியர். இவர் மனிதநேயம் பற்றிக் குறிப்பிடுவது கருதத்தக்கது.

உலகில் இன்பம் நிலவுவதற்கு அடிப்படைக் காரணம் அன்பு. இன்பம் என்பது அவரவர் மனத்தைப் பொறுத்தே அமைகின்றது. இதனைத் தொல்காப்பியர்,

> "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்"[30]

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். எனவே, மனிதன் தன் மனமகிழ்ச்சியை நாடின், மாற்றாரின் நலனையும் நாட வேண்டியவனாகின்றான் என்பது புலனாகின்றது.

### *சங்க கால மனிதநேயம்*

தொல்காப்பியத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ்ச் சமுதாயத்தின் நிலையை அறிய அனைத்து வகையிலும் உதவுவன சங்க இலக்கியங்கள். இவை அகம், புறம் என்ற இருதிறத்திலும் அக்காலச் சமுதாயத்தின் மனிதநேயத்தைக் காட்டுகின்றன. சங்க காலச் சமுதாயம்

தனிமனித நலனை மட்டுமன்றிச் சமுதாயம் முழுவதன் நலனையும் எண்ணுவதாகவே திகழ்ந்தது.

"சங்க காலத் தமிழ்ச் சமுதாயம், சமய நம்பிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அன்று. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்னும் மனிதநலக் கோட்பாட்டினையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது."[31]

எனக் கா. மீனாட்சிசுந்தரம் கூறுகிறார்.

'மன்பதை காக்கும் நின்புரைமை (புறம் 210)'

'யாதும் ஊரே; யாவரும் கேளிர் (புறம் 192)'

ஆகிய இலக்கியத் தொடர்கள் சங்க காலத்திலே உலகம் முழுவதையும் ஒன்றாகக் கருதிய பாங்கையும் அனைத்து மக்களையும் தம்மைப்போலவே எண்ணி மதித்துப் போற்றிய பண்பையும் வெளிப்படுத்துகின்றன.

இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த தகைமையாளர்களாலேயே இவ்வுலகம் நிலைபெற்றிருக்கின்றது எனச் சங்க கால மக்கள் நம்பினர். அவர்கள் பிறரது வறுமையைக் கண்டு அஞ்சினர், அவர்தம் வறுமையைப் போக்குதலே தம் தலையாய கடமை என்றெண்ணினர். இதற்குப்

புறநானூற்றிலும் பிற சங்க நூல்களிலும் காணப்படும் வள்ளல்கள் பற்றிய செய்திக் குறிப்புகள் சான்றாக அமைகின்றன.

'ஆற்றுதல் என்ப(து) ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்'[32]

என்ற பாடலால் குறியெதிரிப்பில்லாத ஈகைத்திறன் சங்க மக்களால் பேணப்பட்டது என்றறியக் கிடக்கிறது.

சான்றோரால் மதித்து உயர்த்திக் கூறப்படும் செல்வம் யாதெனில், "தம்மை நம்பி வந்து அடைந்தோரின் துன்பத்தை, வறுமையைக் கண்டு அஞ்சி அத்துன்பத்தைப் போக்கி அவரைக் கைவிடாமல் காக்கும் இனிய தன்மையேயாகும் என்று சங்ககால தமிழ்மக்கள் போற்றிய மனித நலக் கோட்பாடு உணர்தற்குரியது.

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியாகி உலகமும் இன்புற வேணடும்.

என்பது பண்பைத் தமிழரின் மனிதநல நாட்டமாகும்."[33]

என்று சங்க கால மக்களின் மனிதநலக் கோட்பாடுகள் பற்றிக் க.த.திருநாவுக்கரசு கூறுகிறார்.

சங்க கால மக்களின் மனிதநேயம் தன் குடும்பம், தன் ஊர், தன் நாடு என்று பற்றுக்களினின்றும் விரிந்து பரந்து உலகளாவிய

நிலையில் உயர்ந்து நின்றதற்குக் கணியன் பூங்குன்றனாரின் பாடல் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியங்களில் தொடக்க காலத்திலிருந்தே மனித நேயப பண்பு பேசப்பட்டு வந்துள்ளதைச் சான்றுகளாய் வெளிப்படுத்துகின்றன. இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள காப்பியங்களிலிருந்தும் மனித நேயத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. இவ்வுயர்பண்பைச் சிலப்பதிகாரத்தின் வழி இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சில கடமைகள் உண்டு. அதில் சமுதாயக் கடமை ஒன்று, அதிலும் பிறர் நலம் பேணல் தலையாய கடமை என்பதனை இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் காப்பியத்தில் காண முடிகிறது[34] என்பது மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும் ஒரு காரணியாக அமைந்திருக்கின்றது. இக்காவியத்தின் மூலம் 'கண்ணகி' என்ற தமிழ்க் குடும்பப் பெண்ணின் உயர்ந்த மனித நேயத்தை ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகி, கணவனுடன் இருந்து விருந்தினரை உபசரிக்க இயலவில்லையே என வருந்துவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்பண்பு மனித நேயப் பண்பாகக் கொள்ளத்தகுந்தது. இச்சூழலை,

'அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும், இழந்த என்னை'[35]

என்ற கண்ணகியின் கூற்றுவாயிலாக இளங்கோவடிகள் புலப்படுத்துகின்றார்.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றாகிய சிலம்பு இப்படிக்கூற, மணிமேகலை பசிப்பிணி அறுத்தலையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. பண்டைத் தமிழகத்தில் மற்றவரின் வறுமையைக் களைவதே மனிதநலக் கொள்கையாகத் திகழ்ந்தது.

குடிப்பிறப்பறிந்து, சிறப்பினைக் கொன்று; கல்வி நலனையும் கெடுத்து நாணினைக் களைந்து; மாணெழில் சிதைத்துப் புறக்கடை நிறுத்தும் பாவியாகிய பசியை மணிமேகலை அழிக்க விரும்பியமையை,

'மண்டிணிஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்

உண்டிகொடுத்தோ ருயிர் கொடுத்தோரே'[36]

என்றும் அவளது அமுதசுரபியில் பிச்சையிட்ட கற்புக்கரசியாம் ஆதிரை

'பாரக மடங்கலும் பசிப்பிணியறுகென'[37]

வாழ்த்தியமையையும் சாத்தனார் எடுத்தியம்பும் திறம் உணர்த்தி இன்புறத்தக்கது.

சிலம்பும், மேகலையும் மக்களின் பசிப்பிணி அறுத்தலைச் சிறந்த நேயமாகக் கொள்ள கம்பன் சாதிவேறுபாடற்று,

'குகனொடும் ஐவரானோம் முன் பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம் எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதலைய நின்னொடும் எழுவரானோம்
புகலருங் கானந்தந்து புகல்வரால் பொலிந்தான் றுந்தை'[38]

என இராமன் அனைவரையும் நேயத்தோடு சகோதரனாக ஏற்றுக் கொண்ட தன்மையைக் காட்டுகிறார்.

பக்தி இலக்கியங்களாகிய இவை இறைவனை அன்பு வடிவாகவே கண்டன. காடுமேடெல்லாம் கடவுளைத் தேடி அளைந்த அப்பரடிகள் இறுதியில் ஐயாற்றில் அன்பு வடிவிலேயே இறைவனைக் கண்டதாகக் கூறும் திறம் நோக்கற்குரியது.

'காதல் மடப்பிடியோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்'[39]

என்ற பாடலடிகளில் அப்பரடிகளின் நேயச் சிந்தை சிறக்கிறது. சமகாலத்தவராகிய அப்பரும், ஞானசம்பந்தரும் வாழ்ந்த காலத்தில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டதாம், அது கண்டு இருவரும் மனந்துடித்தனர் என்பதிலிருந்து அனைத்துப் பற்றுகளையும் துறந்த துறவியரும் கூட மனிதநேயத்தைத் துறக்க இயலாதவராய் இருந்தனர் என அறிய முடிகிறது.

அடியார் இருவரும் கொடிய பஞ்சத்திலிருந்து எப்படி மக்களைக் காப்பது என்று கவலையுற்ற பொழுது, கனவில் வந்த இறைவன் இருவருக்கும் பொருள் கிடைக்க வழி செய்ய அவர்களும் இறைப்பணியைச் சற்று ஒதுக்கி வைத்து மக்கட் பணியில் ஈடுபட்டு, மடங்கள் அமைத்துப் பறை சாற்றி மக்களை அழைத்து உணவிட்டு மகிழ்ந்தனர். இதுவும் இது தொடர்பாக 'வாசிதீரவே' என்ற பதிகத்தைச் சம்பந்தர் பாடிய நிகழ்ச்சியும், தமிழகத்துச் சமய வரலாற்றில் காணப்படும் மனிதநேயம் காட்சிகளாகும்"[40] என்று கண்டனூர் மு. தேனப்பன் தமிழ் இலக்கியங்களில் மனித நேயம் என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பக்தியாளர்களில் மிகச் சிறந்த மனிதநேயராகக் கருதப்படுபவர் வள்லார், அப்பர், ஞானசம்பந்தரைப் போலவே இவரும் பசிப்பிணியால் வாடிய மக்களைக் கண்டு பெரிதும் வருந்தினார். ஈகையறம் புரியாதோரைப் பார்த்து வள்ளலார்,

> 'பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும்
> நேரீர்; பழங்கஞ்சி ஆயினும்
> வழங்கவும் நினையீர், எட்டிபோல் வாழ்கின்றீர்
> பித்துலகிரே![41]

எனக் கூறி ஆண்டவனிடம் "ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்ய வேண்டும் (பா 4079) என்று விண்ணப்பிக்கின்றார். வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் (பா 3471) எனக் குறிப்பிடும் வள்ளலார்,

வேறுபாடற்ற சமதர்ம சன்மார்க்க முறையில் மக்கள் தொண்டினையே மகேசன் தொண்டாகக் கருதி வாழ்ந்த மிகப்பெரும் மனித நேயப் பண்பாளராக விளங்குகிறார்.

தற்காலக் கவிஞர்களில் முதலிடம் பெறுபவர் பாரதியார். பாரதி நாட்டுப்பற்றுக் கொண்டவர் மட்டுமின்றிச் சிறந்த மனிதநேயம் மிக்கவருமாவார்[42]

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்வு சொல்லல் பாவம்'
--------------------------------------
அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்"[43]

என்றும்,

"காக்கை குருவி எங்கள் சாதி என்றும்
சாதிக் கொடுமைகள் வேண்டா - அன்பு
தன்னில் செழித்திடும் வையம்"[44]

என்றும் பாரதி கூறுவது அனைத்து உயிர்களையும் ஒன்றாய் மதித்த பாங்கை வெளிப்படுத்துகின்றது.

'ஒரு மனிதன் நோவ மனிதர் பார்க்கும் வழக்கம் இனியுண்டோ' என்ற பாரதியின் வினாவில் அவன் காலத்தில் மனித சமுதாயம் முழுமையின் மீதும் அவன் கொண்ட அன்பு வெளிப்படுகின்றது.

தமிழிலக்கிய உலகில் பகுத்தறிவுச் சிந்தை கொண்ட விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் பாவேந்தர். இவர்தம் பாடல்கள் தமிழுக்கு ஒளிசேர்க்கும் ஒப்பற்ற சுடர்களாகும். பாவேந்தர் பாடல்கள் அனைத்திலும் அவருடைய பரந்துபட்ட மனிதநேயப் பண்பு பொதிந்து கிடப்பதைக் காணமுடிகிறது.

மனிதநேயம் பண்புள்ளோர் உலகம் முழுவதையும் நேசிக்கும் பண்புடையோராகவும் அனைத்து மனிதரையும் தம்மோடு ஒப்பு நோக்கி அவர்களது இன்ப துன்பங்களில் பங்கேற்க விழைவோராவும் திகழ்வர்.

'பாரடா! உனது மானிடப் பரப்பை
பாரடா! உன்னுடன் பிறந்த பட்டாளம்
மானிட சமுத்திரம் நானென்று கூவு'[45]

என்றும்,

உவகை! உவகை! உலகத்தாயின் கூத்து
வந்து குவியுதடா! நெஞ்சில் உவகை! உவகை![46]

என்று உலகத்து இன்பத்தைக் கண்டு உலகத்தாய் இன்புறுவதாகவும், உலகப் பொதுமையை வெளியிடுகிறார் பாரதிதாசன். தொல்லுக மக்களெல்லாம் ஒன்றே என்னும் ஒருமை உள்ளம் தூய அன்புள்ளம் கொண்டவள் உலகத்தாய் என்கிறார் கவிஞர். ஒவ்வொரு மனிதனையும் நீ மனிதரை உயர்வு செய்யும் மனிதனாவாய் மானுஷிகத்தை உயர்வுபடுத்தி அதன்பால் நன்றி செலுத்தும் மேன்மகனாக விளங்குவாய்[47] எனத் தன் மானிடப் பரப்பை உயர்த்துவதன் மூலமே தன்னை உயர்த்திக் கொள்ள

முடியும் என வலியுறுத்துகிறார். அத்தோடு ஒவ்வொரு மனிதனுடைய உயர்விற்கும் அவன் மட்டுமோ அல்லது அவனது விதி மட்டுமோ காரணமல்ல என வலியுறுத்தும் பாவேந்தர் அவனது உயர்விற்கான காரணத்தை வலியுறுத்திக் கூறத் தவறவில்லை.

"உனது இன்றைய பேஷான நிலைக்குப் பிற மனிதர் காரணம், நீ காரணம் நீயும் மனிதன் என்பதை மறக்காதே இன்னும் சுருக்கமாய்க் கூறுகிறேன் நீயும் பிறரும் ஆகிய மனிதர் உனது மனிதத் தன்மைக்குக் காரணம், இதுதான் மானிடத்தன்மை மனிதத் தன்மையால், அதாவது உலக மனிதர்களிடம் நீ எவ்வளவு மதிப்பு வைக்க வேண்டும் மக்களுக்கு நீ நியாயமாக உயர்வு தந்து அதனால், நீ உயர்வு பெற வேண்டும். எது நீயோ அதை உயர்வுபடுத்துவதிலும், எது நீயோ அதன்படில் நீங்காத பற்றுக் கொள்வதிலும் நீ பின்வாங்கலாகா, மானுடம் போற்று, அதனிடம் நீ நன்றி செலுத்து"[48] என்று பாவேந்தர் கூறுவது எண்ணத்தக்கது.

மானுடம் போற்றும் சமுதாயமே உயர்வடைய முடியும். உலகினில் மக்கள் எல்லாம் சமம், மக்கள் சரிநிகர் சமானம். எல்லாத் துறையிலும் எவரும் நிகரே என்பதனை எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடமை, எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே என்ற பொதுச் சிந்தனை வளர வேண்டும்.

# சான்றெண் விளக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1) | தமிழ்க் காதல் | - வ.சு.ப. மாணிக்கம் | பக் -505-506 |
| 2) | அன்பர் எனப்படுபவர் யார்? தமிழ்ப் பொழில் | - குமாரசாமி (க. ஐ) | மார்ச் - ஏப்ரல் 1959 |
| 3) | "சமுதாயம்" தமிழ்நாட்டு வரலாறு சங்க காலம் | - கா. மீனாட்சி சுந்தரம் | ப - 1 |
| 4) | கழகக் கையகராதி | - | ப - 243 |
| 5) | மேற்படி | - | ப - 244 |
| 6) | சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் லெக்சியம் | - | தொகுதி 4 |
| 7) | The New Caxton Encyelopaedia | - | Vol - 12 |
| 8) | பெருஞ்சொல்லகராதி | - | தொகுதி 1 |
| 9) | சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் | - | தொகுதி 1 |
| 10) | நாமதீப நிகண்டு | - | நூ - 608 |
| 11) | சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் லெக்சிகன் | - | ப - 183 |
| 12) | சங்கநெறி | - வ.சு.ப. மாணிக்கம் | பக் - 25-26 |
| 13) | திருவருட்பாவில் மனிதநேயம் | - சி. செல்வராணி | பக் - 3-4 |
| 14) | விழா மலர் | - மூதேன் | ப - 57 |
| 15) | மேலது | - | ப - 54 |
| 16) | திருவருட்பாவில் மனிதநேயம் (பி.எச்.டி. ஆய்வேடு) | - செல்வராணி | ப - 5 |
| 17) | பாவேந்தரின் மனிதநேயம், புரட்சிப் பாவேந்தர் மாந்தநேயம் | - மா. அய்யாச்சாமி | ப - 194 |
| 18) | தமிழ் இலக்கியம் காட்டும் மனையியல் | - சு. சிவகாம சுந்தரி | ப - 139 |

| | | | |
|---|---|---|---|
| 19) | சங்க கால நாகரீகம் தமிழனங்கு | - வி. சந்திரசாதநைனார் (க. ஆ) | ப - 132 |
| 20) | அன்புச்செல்வம் காற்ரைப் புலவர் கல்லூரி ஆண்டு மலர் 1974 | - கு. பாண்டுரங்கன் (க.ஆ) | ப - 9 |
| 21) | பாரதிதாசன் படைப்பபுகளில் மனிதநேயம் | - இரா. சக்குபாய் | ப - 295 |
| 22) | Encyelopaedia Americana | - | P - 553 |
| 23) | சோசலிசமும், மனிதநேயமும் | - எஸ். போபொவ் | ப - 1 |
| 24) | Frolov | - I bid | P - 178 |
| 25) | I bid | - | P - 178 |
| 26) | I bid | - | P - 178 |
| 27) | எஸ். போபவ் | - | மு.நூ.ப. 148 |
| 28) | பாவேந்தரின் மனிதநேயம், புரட்சிப் பாவேந்தர் மாந்த நேயம் | - மா. அய்யாச்சாமி | ப - 195 |
| 29) | மேலது | - | ப - 198 |
| 30) | தொல், பொருள், பொருளியல் | - | ப - 216 |
| 31) | சமுதாயம் தமிழ்நாடு சங்ககால வாழ்வியல் | - க. மீனாட்சிசுந்தரம் (க.ஆ) | ப - 2-3 |
| 32) | கலித்தொகை | - | ப - 133 |
| 33) | நாகரீகமும் பண்பாடும் தமிழ்நாடு சங்ககாலம் வாழ்வியல் | - க.த. திருநாவுக்கரசு | பக் - 197-198 |
| 34) | தமிழிலக்கியத்தில் மனிதநேயம் எட்டாவது உலகத்தமிழ் மாநாடு விழா மலர் | - தேனப்பன் | ப - 55 |
| 35) | சிலம்பு கொலைக்களக் காதை | - | வரி 71 - 73 |

| | | | |
|---|---|---|---|
| 36) | மணி - காதை 11 | - | வரி 95 - 96 |
| 37) | மணி - காதை 16 | - | வரி 134 |
| 38) | கம். வீடணன் அடைக்கலப் படலம் | - | |
| 39) | தேவாரம், திருவையாற்றுப் பதிகம் | - திருநாவுக்கரசர் | பா - 1 |
| 40) | தமிழிலக்கியத்தில் மனிதநேயம் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு விழா மலர் | - மு தேனப்பன் (க.ஆ) | ப - 55 |
| 41) | திருவருட்பா ஆறாம் திருமறை | - வள்ளலார் | ப - 556 |
| 42) | தமிழிலக்கியம் மனிதநேய விழா மலர் | - மு. தேனப்பன் | ப - 55 |
| 43) | பாரதியார் கவிதைகள் | - பாரதியார் | ப - 208 |
| 44) | மேலது | - | ப - 187 |
| 45) | பாரதிதாசன் கவிதைகள் | - பாரதிதாசன் | ப - 125 |
| 46) | மேலது | - | ப - 190 |
| 47) | மானுடம் போற்று | - பாரதிதாசன் | ப - 84 |
| 48) | மேலது | - | ப - 82 |